வேளாண்மைதுறை அமைச்சரின் பதில் உரை 7.5.08.

வேளாண்மை அமைச்சர் [redacted]

தமிழ்நாட்டில் 55 இலட்சம் எக்டர் பரப்பில் சாகுபடி செய்யப்படும் நெல், சிறுதானிங்கள், பயறு வகைகள் மற்றும் இதர பயிர்களுக்கு ஒரு வருடத்திற்கு சராசரியாக 17 இலட்சம் மெட்ரிக் டன் யூரியா, டி.ஏ.பி. மற்றும் பொட்டாஷ் உரங்கள் தேவைப்படுகிறது. தமிழகத்தில் 2007–2008ஆம் ஆண்டில் யூரியா மற்றும் பொட்டாஷ் உரங்கள் எவ்வித தட்டுப்பாடுமின்றி விநியோகம் செய்யப்பட்டது. ஆனால் 2007–2008ஆம் ஆண்டு ரபி பருவத்தில் டி.ஏ.பி. உரத்திற்கு மட்டும் கடுமையான தட்டுப்பாடு தமிழகத்தில் மட்டுமின்றி அனைத்து மாநிலங்களிலும் நிலவியது. ஏனெனில் டி.ஏ.பி. உரம் தயார் செய்ய மூலப் பொருளான ''**பாஸ்பாரிக் அமிலம்**'' வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வந்தது. கடந்த ஆண்டு பாஸ்பாரிக் அமிலத்தின் விலை வெளிச் சந்தையில் அதிக அளவில் உயர்ந்ததால் டி.ஏ.பி. உரம் தயார் செய்யும் உர நிறுவனமான ஸ்பிக், உற்பத்தியை வெகுவாக குறைத்துக் கொண்டு மார்ச் 2007ல் டி.ஏ.பி. உற்பத்தியை நிறுத்தி விட்டது. இந்தியாவில் உள்ள உரம் தயார் செய்யும் உள்நாட்டு நிறுவனங்களும் டி.ஏ.பி. உற்பத்தியை குறைத்து விட்டதால் இந்தியா முழுவதும் டி.ஏ.பி. உரத் தட்டுப்பாடு ஏற்பட்டது.

நிலைமையைக் கூர்ந்து கவனித்து வந்த தமிழக அரசின் சார்பாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 23.11.2007 அன்று மத்திய இரசாயனம், உரம் மற்றும் எஃகுத் துறை அமைச்சர் அவர்களுக்கு 77,000 மெட்ரிக் டன் டி.ஏ.பி. உரத்தினைத் தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்யுமாறு கடிதம் எழுதப்பட்டது.

மேலும் தொடர்ந்து, விவசாயிகளுக்கு தங்கு தடையின்றி டி.ஏ.பி. உரம் கிடைக்கும் வண்ணம் தமிழக அரசு டான்பெட் நிறுவனத்தை மாநில ஒருங்கிணைப்பு முகமையாக நியமித்து, அந்நிறுவனத்துக்கு முதல் கட்டமாக அரசு 20.6.2007 அன்று ரூ.10 கோடியும், இரண்டாம் கட்டமாக 24.8.2007 அன்று ரூ.20 கோடியும் வட்டியில்லா வழிவகை முன்பணமாக ரூ.30 கோடி வழங்கப்பட்டு இந்தியன் பொட்டாஷ் லிமிடெட் மற்றும் ராஷ்டிரிய கெமிக்கல்ஸ் போன்ற இறக்குமதியாளர்களிடமிருந்து கடந்த ஆண்டு மட்டும் 1.04 இலட்சம் மெட்ரிக் டன் டி.ஏ.பி. உரத்தை கொள்முதல் செய்து தமிழகத்தில் உள்ள அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கி எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு டி.ஏ.பி. உரம் 18 சதவீதம் கூடுதலாக விநியோகம் செய்து சாதனை படைத்துள்ளது.

| | | |
|---|---|---|
| கடந்த 5 ஆண்டு சராசரி டி.ஏ.பி உர பயன்பாடு | : | 2,82,853 மெட்ரிக் டன் |
| 2007–2008ஆம் ஆண்டு விநியோகம் செய்யப்பட்ட டி.ஏ.பி. அளவு | : | 3,35,230 மெட்ரிக் டன் |

2008–2009ஆம் ஆண்டு காரீப் பருவத்திற்கு (ஏப்ரல் முதல் செப்டம்பர் மாதம் வரை) யூரியா 4.35 இலட்சம் மெட்ரிக் டன்னும், டி.ஏ.பி. 2.0 இலட்சம் மெட்ரிக் டன்னும், பொட்டாஷ் உரம் 2.0 இலட்சம் மெட்ரிக் டன்னும், தேவை எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் 2008 மே மாதத்திற்கு யூரியா 60,000 மெட்ரிக் டன்னும், டி.ஏ.பி. 23,000 மெட்ரிக் டன்னும், பொட்டாஷ் 25,000 மெட்ரிக் டன்னும் தேவைப்படுகிறது.

தமிழகத்தில் உள்ள உர உற்பத்தியாளர்களைக் கொண்டு நடைபெற்ற மே 2008 மாதத்திற்கான மாநில அளவிலான உரம் வரவு மற்றும் விநியோக திட்ட ஆய்வுக் கூட்டத்தில், யூரியா 86,245 மெட்ரிக் டன்னும், பொட்டாஷ் 60,775 மெட்ரிக் டன்னும் விநியோகம் செய்வதாக உற்பத்தியாளர்கள் இசைவு தெரிவித்தனர். மே மாத டி.ஏ.பி உரத் தேவையான 23,000 மெட்ரிக் டன்னுக்கு, பதிலாக, 9,900 மெட்ரிக் டன் மட்டுமே விநியோகம் செய்ய இயலும் எனத் தெரிவித்தனர்.

இந்த நிலமையை அரசு கவனத்தில் கொண்டு மீண்டும் நமது முதலமைச்சர் அவர்கள் 4.4.2008 அன்றும் மத்திய அரசின் இரசாயனம், உரங்கள் மற்றும் எஃகுத் துறை அமைச்சர் அவர்களுக்கு ஜூன் மாதம் வரை தேவையான 73,500 மெட்ரிக் டன் டி.ஏ.பி. உரத்தை தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்யுமாறு கடிதம் அனுப்பினார்கள். இக்கடிதத்திற்கு மாண்புமிகு இரசாயனம், உரங்கள் மற்றும் எஃகுத் துறை அமைச்சர் அவர்கள் 11.4.2008 அன்று பதில் அனுப்பி தமிழகத்திற்கு தேவையான டி.ஏ.பி உரத்தை வழங்கிட மத்திய உரத் துறைக்கு உத்திரவிட்டார்.

அதன் பேரில், 22.4.2008 அன்று புதுதில்லியில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் மத்திய அரசின் உரச் செயலாளர், தமிழகத்திற்கு கோரமண்டல் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட் மூலம் 20,000 மெட்ரிக் டன்னும், இந்தியன் பொட்டாஷ் நிறுவனம் மூலம் 10,000 மெட்ரிக் டன்னும், இப்கோ நிறுவனம் மூலம் 7,500 மெட்ரிக் டன்னும், மங்களூர் கெமிக்கல்ஸ் லிமிடெட் மூலம் 1500 மெட்ரிக் டன்னும், ஜுவாரி இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் மூலம் 1,680 மெட்ரிக் டன்னும் ஆக மொத்தம் 40,680 மெட்ரிக் டன்னை உடனடியாக வழங்க சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு

அக்கூட்டத்திலேயே ஆணை வழங்கப்பட்டது. இந்நிறுவனங்கள் இவ்வுரங்களை 12.5.2008க்குள் தமிழகத்திற்கு விநியோகம் செய்ய உள்ளது. இன்றைய நிலையில் தமிழகத்தில் யூரியா 61,049 மெட்ரிக் டன்னும், பொட்டாஷ் 32,000 மெட்ரிக் டன்னும், டி.ஏ.பி. 5396 மெட்ரிக் டன்னும் கையிருப்பில் உள்ளது. இதன் மூலம் மே மற்றும் ஜூன் மாத டி.ஏ.பி. உரத் தேவையை தமிழக அரசு எவ்வித இடர்பாடுகளுமின்றி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், கள்ள மார்க்கெட்டில் உரங்களை பதுக்கி வைத்து, அதிக விலைக்கு விற்பனை செய்வதைத் தடுக்க, மாவட்ட அளவில் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக் கண்காணிப்புக் குழுக்கள் உர உரிமம் பெற்றுள்ள விற்பனை நிலையங்களை ஆய்வு செய்து, அரசு நிர்ணயம் செய்துள்ள விலைக்கு விவசாயிகளுக்கு உரம் வழங்கப்படுவதைக் கண்காணித்து வருகிறது. மேலும், எந்த ஒரு உர விற்பனை நிலையங்கள் மீதும் துறைக்கு புகார் வருமானால், அந்த உர நிலையத்தை ஆய்வு செய்து, உரக்கட்டுப்பாடு சட்டம் 1985ன்படி நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

உதாரணமாக, "செந்தில் ஏஜென்ஸீஸ்", 372, திண்டுக்கல் ரோடு, ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம் என்ற உர விற்பனை நிலையத்தின் மீது உரங்களை பதுக்கிவைத்து, கள்ள மார்க்கெட்டில் விற்பனை செய்ய உள்ளதாக புகார் வந்தவுடன், அந்த உர விற்பனை நிலையத்தை குழு ஆய்வு செய்து, 12.75 மெட்ரிக் டன் பாக்டம்பாஸ் உரத்தை முடக்கி வைத்து, கண்டுபிடித்து, அவ்வுர நிலையத்தை 22 நாட்களுக்கு விற்பனை செய்வதை தடை செய்யப்பட்டது. விற்பனைத் தடை நீக்கக் காலம் முடிந்தவுடன் கடந்த 28.4.2008 அன்று மீண்டும் அவ்வுர நிலையத்தை ஆய்வு செய்து,

12.75 மெட்ரிக் டன் பாக்டம்பாஸ் உரத்தை டான்பெட் நிறுவனத்திற்கு மாற்றம் செய்து, விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது.

இதுபோன்ற புகார்கள் வேளாண்மைத் துறைக்கு வந்தால், கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் தமிழக அரசு டான்பெட் நிறுவனத்திற்கு 2007–2008ஆம் ஆண்டு வழங்கிய ரூ.30 கோடியை 2008–2009ஆம் ஆண்டில் தொடர்ந்து பயன்படுத்திக் கொள்ளவும், 2008–2009ஆம் ஆண்டுக்கு கூடுதலாக ரூ.20 கோடி வட்டியில்லா வழிவகை முன்பணமாக வழங்கிடவும் உள்ளது.

இந்த ரூ.50 கோடி நிதியினைக் கொண்டு கடந்த ஆண்டு கொள்முதல் செய்ததைப் போலவே இந்த ஆண்டும் டி.ஏ.பி. உரத்தை அதிக அளவில் இறக்குமதியாளர் மற்றும் உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்முதல் செய்து தமிழகத்தில் உள்ள 3,709 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய வழி வகை செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் டி.ஏ.பி. உரம் மட்டுமின்றி எந்த உரத்திற்கும் தட்டுப்பாடு இன்றி வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.